# இரண்டாம் வத்திக்கான் சங்கப்பின்னணியில் பொதுநிலையினரின் கடமைகளும், உரிமைகளும்

*சைலேந்தினி போல்ரன் றஜீவ்[1], அருட்கலாநிதி. போல் றொகான்[2]*
*பட்டமேற்படிப்பு ஆய்வாளர், பட்டமேற்படிப்புகள் பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.[1]*
*தலைவர், கிறிஸ்தவ, இஸ்லாமியநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.[2]*
*sylenthini@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம் -*** *பொதுநிலையினர் திரு அவையில் உரிமையும், கடமையும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள். இறைவனின் வார்த்தையைப் போதியளவு கேட்கவும், இறைவனின் அருட்சாதனங்களை அடிக்கடி கொண்டாடி ஊட்டமும், உறுதியும் பெறவும், திரு அவை நலனுக்காகத் தமது ஆலோசனையைக் கூறவும், திரு அவை யின் வாழ்விற்கு ஏதுவான சகல காரியங்களிலும் சுதந்திரத்தோடும், உரிமையோடும் கருத்துக்களைத் தெரிவிக்கவும், தவறுகளைக் கண்டிக்கவும், நன்மையானவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்லவும், சொல்லவும் உரிமையும், கடமையும் கொண்டிருக்கின்றனர். இதனடிப்படையில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினர் திருத்தூதுப் பணி பற்றிய கொள்கைகளையும், நடைமுறைகளையும் இதில் ஆராய்ந்ததில், திரு அவை வரலாற்றில் இதுவரை 21 பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன. இரண்டாம் முறையாக வத்திக்கான் நகரில் கூட்டப்பட்ட இப் பொதுச்சங்கமே "இரண்டாம் வத்திக்கான் சங்கம்" என அழைக்கப்படுகிறது. 1962 முதல் 1965 வரை 4 அமர்வுகளாக நடைபெற்ற இப் பொதுச்சங்கத்தில் உலகெங்குமிருந்து 2900க்கு மேற்பட்ட ஆயர்கள் பங்கேற்றனர். இப் பொதுச்சங்கம் திரு அவை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. பொதுநிலையினரைப் பொறுத்தமட்டில் ஒரு பொற்காலத்தை உருவாக்கித் தந்தது திருஅவைக்குப் புத்துணர்ச்சி வழங்கி புதியதொரு சிந்தனையை அளித்து ஆழமான பொருள் நிறைந்த விதத்தில் அது இவ்வுலகில் பணியாற்றிட வழி வகுத்தது. சங்கத்தின் இறுதியில் 16 ஏடுகள் வெளியிடப்பட்டன. அனைத்து ஏடுகளிலும் பொதுநிலையினரைப் பற்றிய புதிய சிந்தனை பிரதிபலித்தாலும், புதிய பொதுநிலையினர் இறையியலை 1.திருஅவை , 2.பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி, 3.இன்றைய உலகில் திருஅவை என்று மூன்று ஏடுகள்*

*சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளுக்கேற்ப இக்காலத்தின் தேவைகளுக்கேற்ப திரு அவையின் புதிய சட்டத் தொகுப்பு வெளியிடப்பட்டு 1983 ஆம் ஆண்டு முதல் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. இச் சட்டத் தொகுப்பு நான்கு முக்கிய கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. 1.இறைமக்களே திருஅவை 2.பணிபுரியவே ஆட்சி அதிகாரம் 3.திருஅவை ஓர் உறவுச்சமூகம் 4.திருஅவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிமைகள், கடமைகளோடு அனைத்துப் பணிகளிலும் அனைவரும் பங்கேற்பு. இவ்வாறாக சங்கஏடுகள் மற்றும் திருஅவைச் சட்டத்தின் அடிப்படையில் பொதுநிலையினர் இயல்பு, தன்மை, உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.*

**திறவுச்சொற்கள் -** *இரண்டாம் வத்திக்கான் சங்கம், திரு அவை, பொதுநிலையினரின் கடமைகளும், உரிமைகளும், யாழ்ப்பாண மறைமாவட்டம்.*

## அறிமுகம்

*காலத்துக்குக் காலம் பொது நிலையினரின் நிலையும், விழிப்புணர்வும் மாறிக் கொண்டே வந்துள்ள நிலையில் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல் மிகவும் மெதுவாகவே நடைபெற்றது. இந்தப் பின்னணியில் பொது நிலையினரின் பங்கை விரிவாக ஆராய வேண்டியது பொருத்தமானதாகும். பொதுநிலையினரின் திருத் தூதுப்பணி திருஅவை யின் வாழ்விலும், பணியிலும் பங்கு கொள்வதாகும். இறைவனின் அழைப்பை ஏற்பதன் மூலம் ஒவ்வொரு பொதுநிலையினதும் உலகைப் புனிதப்படுத்தலில் தனது பங்கைச் செலுத்துகின்றான். உலகிலே வாழ்ந்து உலகிலே செயலாற்றுபவர்கள் பொதுநிலையினர். இந்த உலகு தான் மீட்புப் பணியை ஆற்றவும், இறையரசை முன்னெடுத்துச் செல்லவும் தளமாக அமைகின்றது. தங்களுடைய கிறிஸ்தவ அர்ப்பணிப்பால் மட்டுமே பொதுநிலையினர் தங்களின் பங்களிப்பை நல்க முடியும்.*

*இவர்கள் புதிய இறை மக்கள் என்பதன் காரணமாகக் கிறிஸ்துவின் புனிதப்படுத்தும், போதிக்கும், வழிநடத்தும் பணிகளின் பங்காளிகளாக இயங்குகின்றனர். அதேவேளையில் தாம் பெற்ற இறை வார்த்தையையும், வரத்தையும் உலகிற்கு வழங்கவும், உலகின் தேவைகளையும், பிரச்சனைகளையும் இறைவன் முன் சமர்ப்பித்து வேண்டவும் கடமைப்பட்டுள்ளனர். இதனால் பொதுநிலையினர் உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும், உலகத்தில்*

ஈடுபட்டிருப்பவர்களாகவும், உலகத்தின் பொறுப்புடையவர்களாகவும் செயல்பட வேண்டும். தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக உண்மையான அருங்கொடைகளைப் பெற்றவர்கள். இப்பின்னணியிலே பொதுநிலையினர் உரிமையும், கடமையும் கொண்ட முழு அங்கத்தவரென்றும், கிறிஸ்துவின் முப்பணிகளின் பங்காளிகளென்றும் அருங்கொடை பெற்று உலகிலே உரிமையுடன் செயற்படுபவர்கள் என்றும் இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளின் ஊடாக அறிய முடிகின்றது. இதனடிப்படையில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினர் திருத்தூதுப் பணி பற்றிய கொள்கைகளையும், நடைமுறைகளையும் இதில் ஆராய்கின்றது.

**ஆய்வுமுறையியல்**

ஆய்வு வகை - இலக்கிய மீளாய்வு

ஆய்வு வரையறை - இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் கிறிஸ்தவ சஞ்சிகைகள்.

ஆய்வுத் தரவுப் பகுப்பாய்வு – சாதாரண அடிப்படை புள்ளி விபரவியல்

**ஆய்வுத்தரவுகள்**

இரண்டாம் வத்திக்கான் சங்கப் பிண்ணனியில் பொதுநிலையினர்

பொதுநிலையினர் பற்றி மிக்க வளமான கிறிஸ்தவ தத்துவங்களையும், ஆன்மிக மேய்ப்புப் பணிக்குரிய பாரம்பரிய சொத்துக்களையும் திரு அவைக்கு வழங்கியுள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம். இதில் பொது நிலையினரின் இயல்பு, ஆன்மீக தத்துவம், மறை பரப்பு பணிப் பொறுப்பு என்பன பற்றி சங்கப் பிதாக்களின் பரந்த ஆழமான சிந்தனைகளை மிகச் சிறந்த வகையில் உலகிற்கும், திரு அவைக்கும் வெளிப்படுத்துகின்றன.

திருஅவையில் பொது நிலையினர்:

திருஅவை ஆட்சியாளரின் அலுவல்களைத் தெளிவுபடுத்திய பின் பொதுநிலையினர் என அழைக்கப்படும் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டவரின் நிலையைப் பற்றி ஆராய்வதிலேயே திருச்சங்கம் விருப்புடன் கவனத்தைச் செலுத்துகின்றது. ஏனெனில் "அன்பின் அடிப்படையில் உண்மை பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். அவரால்தான் முழு உடலும் இசைவாய்ப் பொருந்தித் தன்னிடமுள்ள தனது நார்களால் இறுக்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உறுப்பும் தனக்கே குறிக்கப்பட்ட

*பணியைச் செய்வதால் உடல் வளர்ச்சிபெற்று அன்பால் கட்டமைப்பும் பெற்று வளர்ச்சியடைகிறது". (எபே 4:15-16).*

*சுருங்கக் கூறின், பொது நிலையினருக்குத் திரு அவையிலும் பணிகள் உள்ளன. உலகிலும் பணிகள் உள்ளன. ஆனால் பொது நிலையினர் உலகில் ஆற்ற வேண்டிய பணிகளே முதலிடம் பெறுகின்றது என்பதைத் திருப் பணியாளர்களும் பொது நிலையினர்களும் உணர்ந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.*

**பொது நிலையினரின் திருத் தூதுப்பணி**

*பொது நிலையினரின் திருத்தூதுப் பணி பற்றிய விதித் தொகுப்பு 1965 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18 ஆம் நாள் வெளியானது. சங்க ஏடுகள் யாவற்றுள்ளும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே இதை நாம் கருதவேண்டும். ஏனெனில் பொது நிலையினருக்குரிய முக்கியத்துவத்தை இது அளிக்கின்றது. பொது நிலையினரின் திருத்தூதுப் பணி என்பது இறையாட்சியின் செயற்பாட்டை எடுத்துரைக்கும் பணி. இறை தூதுரைப் பணி எனவும் அழைக்கலாம். இறைவனின் மக்களாக இணைக்கப் பெற்று கிறிஸ்துவின் ஒரே தலையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளனர் பொது நிலையினர், அவர்கள் யாராயிருப்பினும் சரி உயிருள்ள உறுப்பினர்களாக படைத்தவரின் கொடையினாலும், மீட்பரின் அருளினாலும் தங்களின் முழு ஆற்றலுடன் திருஅவைக்கு வளர்ச்சியளிக்கவும் தொடர்ந்து அதைப் புனிதப்படுத்தவும் பாடுபடும்படி அழைக்கப் பெறுகின்றனர். நற்செய்தி அறிவிக்கும் பணி என்பது இறை வாழ்வைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பணி. "திருஅவையின் நிறை வாழ்வுப் பணியில் பங்கு பெறுவதே பொது நிலையினரின் திருத்தூதுப் பணியாகும் (பவுல் லியோன்.வ, 1967). இப்பணியை ஆற்றுவதற்கே திருமுழுக்கு, உறுதிப் பூசுதல் ஆகியவற்றின் மூலம் அனைவரும் ஆண்டவரால் அதிகாரப் பூர்வமாக அனுப்பப் பெற்றிருக்கின்றனர். இவ்வாறாக தங்களுக்கு வழங்கப்பெற்ற கொடைகளின் மூலம் எல்லாப் பொதுநிலையினரும் "கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவிற்கேற்ப" (எபே-4:7). திரு அவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியின் சாட்சிகளாகவும் அதே நேரத்தில் அதன் உயிருள்ள கருவிகளாகவும் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் அனைவரையுமே சார்ந்துள்ள இந்தத் திருத்தூதுப் பணியைத் தவிர திரு ஆட்சியாளரின் திருத்தூதுப் பணியிலே பல வகையில் இன்னும் நேரிடையாக ஒத்துழைக்க, பொதுநிலையினர் அழைக்கப் பெறலாம்.*

*இவ் ஒத்துழைப்பானது "நற் செய்திக்காகத் தூய பவுலோடு ஆண்டவரில் பெரிதும் உழைத்த ஆண், பெண் அனைவரது உதவிக்கு ஒத்ததாகும்" (பிலி 4:3, உரோ16:3) அத்துடன் அருள் வாழ்வு நோக்கத்திற்கெனத் திரு அவை சார்ந்த சில அலுவல்களை நிறைவேற்றத் திரு அவை அதிகாரிகளால் அவர்கள் சிறப்பாக அழைக்கப் பெறுவதற்கும் தகுதி பெற்றிருக்கின்றனர்.*

*அத்துடன் பொது நிலையினர் இந்த நற்செய்திப் பணியை தங்கள் வாழ்க்கையின் பல தளங்களில் நிறைவேற்றலாம். இவர்கள் திருத் தூதுப் பணி செய்யும் முதல் தளம் குடும்பம். தங்கள் குழந்தைகளுக்குத் தங்களின் இறை வாழ்வை, நம்பிக்கையை பகிர்ந்து கொள்வது உயர்ந்த திருத்தூதுப் பணியாகும். குடும்பத்தில் இறைவாக்கினராகப் பணி புரிந்து தீமைகளை சுட்டிக்காட்டுவதும் நன்மைகளைப் பிறரிடமிருந்து கற்று வளர்ப்பதும் திருத்தூதுப் பணியின் மற்றொரு பரிமாணம். இரண்டாவது தளம் அவர்கள் சார்ந்துள்ள திரு அவை . பங்குத் திரு அவையில் இறைவனின் மாபெரும் செயல்களைப் பிறருக்கு எடுத்துக் கூறுவது முக்கியமான திருத்தூதுப் பணியாகும்.*

**பொது நிலையினரின் கடமைகளும் உரிமைகளும்**

*பொதுநிலையினரின் உரிமையும் கடமையும் திருமுழுக்கின் மூலமும், உறுதிப்பூசுதலின் மூலமும் தோன்றுகின்றன. எனவே இத் திருவருட்சாதனங்களைப் பெற்ற பொதுநிலையினர் அனைவரும் "கிறிஸ்தவனே தன் பெருமையை உணர்வாயாக"(மரியதாசன்.வ, 1968) என்ற திருத்தந்தை பெரிய சிங்கராயரின் அறைகூவலை ஏற்றுக்கொண்டு தன் கடமையையும் உரிமையையும் மேன்மேலும் அறிந்து அனுசரிக்க வேண்டும். "1917 ஆம் ஆண்டு திரு அவை சட்டத்தில் குருகுலத்தாரின் கடமைகளும் உரிமைகளும் துறவறத்தாரின் கடமைகளும் உரிமைகளும் மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்தன. (அமலச் சந்திரன். ஆ, 2009) ஆனால் 1983 இல் வெளியான புதிய திரு அவைச் சட்டத்தில் பொதுநிலையினரின் கடமைகளும் உரிமைகளும் 2 பகுதிகளாக வரையறுக்கப்பட்டு, முதற் பகுதியில்; கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவருக்கும் உள்ள பொதுவான உரிமைகளும் கடமைகளும் என்றும் இரண்டாவது பகுதியில் பொதுநிலையினரின் உரிமைகளும் கடமைகளும் என்றும் தரப்பட்டுள்ளன.*

*திருநிலையினர் துறவறத்தாரைப் போலவே பொதுநிலையினரும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் ஆவர். ஆகவே இப் பொதுப் பண்பின் அடிப்படையில் எல்லாக் கிறிஸ்தவ விசுவாசிகளின் கடமைகளிலும் உரிமைகளிலும் பொதுநிலையினர் பங்கு*

*பெறுகின்றனர். இப் பொதுவான கடமைகள், உரிமைகளைப் பற்றி புதிய சட்டத்தொகுப்பு இரண்டாவது புத்தகத்தில் முதலாவது தலைப்பில் 16 சட்டங்களில் எடுத்துரைக்கின்றது (சட் 208 – 223). "புதிய சட்டத்தின் இப்பகுதியை கிறிஸ்துவின் விசுவாசிகளின் பேருரிமைப் பத்திரம்" (யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு, 1986) என்றழைக்க வேண்டும். கிறிஸ்துவின் விசுவாசிகளின் கடமைகளும் உரிமைகளும் இதற்கு முன் திரு அவைச் சட்டத்தில் இவ்வளவு தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறப்படவில்லை.*

**இவ்வடிப்படைக் கடமைகளும் உரிமைகளும் பின்வருமாறு:**

*1.அனைத்துக் கிறிஸ்துவின் விசுவாசிகளிடையே மாண்பிலும் செயற்பாட்டிலும் நிலவும் அடிப்படை சமத்துவம். (சட். 208)*

*2.திரு அவையின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து அனைத்துலகத் திரு அவையிலும் மறை மாவட்டத்திலும் தங்களுக்குரிய பொறுப்பை நிறைவேற்றும் கடமை. (சட். 209)*

*3.புனித வாழ்வு வாழ்ந்து திரு அவையின் வளர்ச்சிக்காகவும், புனிதத்திற்காகவும் உழைக்கவேண்டிய கடமை. (சட். 210)*

*4.மீட்பின் நற்செய்தி எல்லா மக்களையும் எட்டும்படி செய்யும் கடமை. (சட். 211)*

*5.திரு மேய்ப்பர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து, திரு அவையின் நலனுக்குரிய காரியங்களில் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறும் உரிமையும் கடமையும். அது போல திரு அவையின் பொதுநன்மை, தனி மனித மாண்பு, மரியாதை கெடாமல் தங்கள் கருத்துக்களை மற்ற கிறிஸ்தவ விசுவாசிகளிடமும் தெரியப்படுத்தும் உரிமை. (சட். 212)*

*6.திரு மேய்ப்பர்களிடமிருந்து ஆன்மீக செல்வங்களைப் பெறும் உரிமை. (சட். 213)*

*7.தங்களுடைய வழிபாட்டு ரீதியில் இறைவனை வழிபடும் உரிமை. (சட். 214)*

*8.அறப் பணிகளுக்காகவும், சமயப் பணிகளுக்காகவும் அழைத்தல்களை மேம்படுத்துவதற்காகவும் சங்கங்கள் அமைத்துக் கூட்டங்கள் நடத்தும் உரிமை. (சட். 215)*

*9.மறைத்தூதுப் பணியை தங்கள் சொந்த முயற்சியால் ஊக்குவித்து ஆதரிக்கும் உரிமை. (சட். 216)*

*10.கிறிஸ்தவக் கல்வி பெறும் உரிமை. (சட். 217)*

*11.*திரு அவையின் ஆசிரியத்திற்குப் பிரமாணிக்கமாயிருந்து இறையியல் ஆராய்ச்சி செய்யும் உரிமை. *(சட். 218)*

*12.*தங்களது வாழ்க்கை நிலையை எவ்வித வற்புறுத்தலுக்கும் உள்ளாகாமல் தேர்ந்து கொள்ளும் உரிமை. *(சட். 219)*

*13.*ஒவ்வொருவருக்கும் தங்கள் நற்பெயரையும், அந்தரங்கத் தன்மைகளையும் காத்துக் கொள்ளும் உரிமை. *(சட். 220)*

*14.*தகுதி வாய்ந்த திரு அவை அரங்கத்தில், சட்டமுறைப்படி தங்கள் உரிமைகளுக்காகப் போராடி அவற்றை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை. சட்டத்திற்கு இசைந்த வகையில் தீர்ப்புப் பெறவும் சட்டத்திற்கு முரணான வகையில் தண்டனை பெறாதிருக்கவும் உரிமை. *(சட். 221)*

*15.*இறை வழிபாடு, மறைத்தூதுப்பணி, அறப்பணி நடத்தவும் திருப்பணியாளர்களை ஆதரிக்கவும் வேண்டிய பொருளுதவிகளை அளிக்கும் கடமை, சமூக நீதியை ஊக்குவித்து ஏழைகளுக்குத் தங்கள் வருவாயிலிருந்து உதவி வழங்கும் கடமை. *(சட். 222)*

*16.* தங்களுடைய உரிமைகளைச் செயற்படுத்தும் போது திரு அவை யின் பொதுநலனையும், மற்றவர்களின் நலனையும், மற்றவர்கள்பால் தங்களுக்குள்ள கடமையையும் கிறிஸ்தவ விசுவாசிகள் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுநலனுக்காக கிறிஸ்தவ விசுவாசிகளுக்குரிய உரிமைகளை ஒழுங்குபடுத்த திரு அவை அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. *(சட். 223)*

மேலே கூறப்பட்டுள்ள அனைவருக்கும் பொதுவான கடமைகள், உரிமைகளுடன் பொதுநிலையினருக்கென்றும் சிறப்பான கடமைகளையும், உரிமைகளையும் *(சட். 204)* திருஅவைச் சட்டத்தொகுப்பு வரையறுத்துள்ளது. இவற்றை, சட்டங்கள் *225 – 231* தருகின்றன.

*1983* இல் வெளியான புதிய திரு அவை சட்டத்தொகுப்பு பொதுநிலையினருக்கு அளித்திருக்கும் உரிமைகள், கடமைகள் பற்றியும் பொதுநிலையினரின் மாண்பையும், முக்கியத்துவத்தையும் பணிகளையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. சட்டம் வழங்கும் இவ்வுரிமைகளையும் கடமைகளையும் அடிப்படையாகக் கொண்டு திரு அவை யிலும் உலகிலும் பொதுநிலையினர் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி உற்று நோக்குவோம்.

*1. இறை வார்த்தைப் பணியில் பொதுநிலையினர்*

*இறைவார்த்தை நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் வாழ்விற்கும் ஊற்றாயிருக்கின்றது. அதுவே உந்து சக்தி கொடுக்கின்றது. அது அனைத்திற்கும் அடிப்படையானது. தனிப்பட்ட வாழ்வில் தேவைப்படும் முழுமனித விடுதலைக்கும் சமூக வாழ்வில் தேவைப்படும் பொறுப்புணர்வுக்கும் இறைவார்த்தையை அல்லும் பகலும் தியானித்தல் அவசியமாகின்றது. இறைவார்த்தைக்கு விளக்கமளித்தல் தொடர்பான தகுந்த பயிற்சியின்மையும் குடும்பங்களில் உள்ளும் புறமும் உள்ள பிரச்சனையும் வேதாகமத்தை வாசிக்க நேரத்தை ஒதுக்காமையுமே மிக முக்கியமான தடையாக இருக்கின்றன.*

*2. திருவழிபாட்டில் பொதுநிலையினர்*

*திருவழிபாடு எண் 10 இல் குறிப்பிட்டுள்ள "திருவழிபாடு திரு அவையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திரு அவை யின் ஆற்றல் அனைத்திற்கும் அஃது ஓர் ஊற்றாகவும் உள்ளது" போல் இந்நிகழ்வில் வாழுகின்ற திரு அவை ஒரே குடும்பமாக ஒன்றுகூடி வருகின்றது. இத்திருவழிபாடு – ஒற்றுமையின் வெளிப்பாடாகவும், பகிர்தலை வளர்க்கும் அனுபவத்தையும் ஏற்படுத்துகின்றது. திருவழிபாடு ஒரு 'சடங்கு', திருப்பலி ஒரு 'நன்மை வாங்குதல்' திருவருட்சாதனங்கள் என்பன 'கடமையை நிறைவேற்றப்படும் சடங்குகள்' என்ற பொதுவான எண்ணத்தில் பொதுநிலையினரின் பங்கெடுப்பு மிகக்குறைவாகும்.*

*3. மறைக்கல்விப்பணியில் பொதுநிலையினர்*

*கிறிஸ்தவ மறையறிவை மக்கள் முழுத்திரு அவையின் தலையாய கடமையாகும். மறைக்கல்வி ஞான அறிவைப் பெறுவதற்கு மட்டுமன்றி, கிறிஸ்தவ வாழ்வியல் முறைகளைச்சீராக அமைத்துக்கொள்வதற்கும் பயன்படவேண்டும். உண்மையான மறைக்கல்வி கிறிஸ்துவின் போதனையை வாழ்விற்குரிய முறையில் உள்வாங்குவதகாகவும், பகிர்வதற்காகவும் அமைகின்றது.*

*4. குழும வாழ்வில் பொதுநிலையினர்*

*இறைவனின் பிள்ளைகளாகவும், கிறிஸ்துவில் ஒரே குழுமமாகவும் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நட்புடன் உறவாடி, பகிர்ந்து வாழ்ந்து, ஒருவரோடு ஒருவர் உண்மை உறவுகளை*

*வளர்த்து, ஒருமனப்பட்டு வாழ்ந்து, உள அமைதியைப் பேண, நமக்குத் தேவையான ஆற்றலைப் பரிசுத்த ஆவி குழும வாழ்வில் தருகின்றார். ஒவ்வொரு ஆலயத்தையும் சூழ்ந்து வாழ்ந்து, ஒன்றாக வழிபாடு செய்து, உறவில், பகிர்தலில் வளரும் குழுமங்களை ஆலயத் திரு அவைகளை உருவாக்குவோம்.*

*5. படைப்பைப் பாதுகாப்பதில் பொது நிலையினர் பணி*

*இறைவனின் மீட்புத் திட்டத்தில், படைப்பு முழுவதும் இறையரசை நோக்கிச் செல்கின்றது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் உணர்த்தி, அதற்கேற்ப செயல்பட திரு அவையைப் பணிக்கின்றது.*

*அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு, அறிவியல் போன்றவை மானிட வளர்ச்சியினதும் மேம்பாட்டினதும் முன்னுரிமை கூடிய அடிப்படைக்கூறுகள். திரு அவை இத்துறைகளில் இயேசுவின் நற்செய்தியையும் அதன் விழுமியங்களையும் அறிவிப்பதனால் இவற்றை மீட்பின் வழிக்கு இட்டுச் செல்லுகின்றது.*

*6. நற்செய்தி அறிவிப்பதில் பொதுநிலையினர் பணி*

*திருஅவையானது உலகினையும் அதனைச் சார்ந்தவற்றையும் நற்செய்தி மயமாக்க அழைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, உலகினை நற்செய்தியின் விழுமியங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கும் பணி கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து பிறக்கும் ஒரு கடமையாகும். 'இன்றைய உலகில் திரு அவை' என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திரு அவைக்கும் உலகிற்குமிடையாயே நிகழவேண்டிய உரையாடலை வலியுறுத்துகின்றது. எனவே தான் சமூக, மறை, பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் சூழலில் திரு அவை மீட்பளிக்கும் பணியை ஆற்ற அதாவது நற்செய்தி மயமாக்க அழைக்கப்பட்டிருக்கின்றது.*

*7. பிரிந்த சபைகளுடன் உறவில் பொதுநிலையினரின் பணி:*

*"தந்தாய் நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்கள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன்...." (அரு. 17: 21-23) என இயேசு வேண்டினார். ஒரே கிறிஸ்து, ஒரே மீட்பு, ஒரே திரு அவை என்பதால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அனைவரும் ஒன்றாக இருப்பதே சிறந்தது. ஆனால் வரலாற்றில் ஏற்பட்ட வருந்தத்தக்க நிகழ்வுகள் காரணமாக கிறிஸ்தவர்களும் திரு அவையும் பிரிந்து வாழ்கிறார்கள். இப்பின்னணியில் இரண்டாம் வத்திக்கான் சங்கம்*

அனைத்துச் சபைகளுக்கிடையேயும் ஒன்றிப்பு உருவாக வேண்டுமென்று விரும்புகின்றது. திருத்தந்தையர்கள் பிரிந்த சபைத் தலைவர்களுடன் சந்திப்பு உரையாடல்களை நடாத்துவதும், திரு அவைக்கும் மற்றைய சபைகளுக்கிடையே வளர்ந்துவரும் ஒற்றுமை இணக்கங்களும் கிறிஸ்தவ ஒன்றிப்பை முன்னெடுத்து வருகின்றது.

*8. தவத்திரு அவையில் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

அனைத்துலக திருஅவை பிரிவினையின் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்க முன்வந்த போதும், (காண். கி. ஒ. எண் 7) தலத்திரு அவை இவ்விடயத்தில் போதிய முயற்சி எடுக்கவில்லை என்பது கவலைக்குரியது.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பிரிந்த சபைகளில் இரு பிரிவினர்கள் உளர். ஒரு பிரிவினர் ஆரம்பகாலப் பாரம்பரியங்களையும் நீண்டகாலம் வாழ்ந்த தமது சொந்த வழக்கமுறைகளையும் கொண்ட கட்டமைப்புப்பெற்ற சபைகள். உதாரணமாக: அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை ஆகியவை. மற்றப் பிரிவினைச் சபைகள் அண்மைக் காலத்தில் தோன்றிய அடிப்படைவாதக் குழுக்கள். எடுத்துக்காட்டாக: இலங்கை பெந்தகோஸ்தே சபை, இயகோவாவின் சாட்சிகள், சீயோன் தேவாலயம், எக்காளத்தொனி போன்றவை. இந்த அடிப்படைவாதக் குழுக்களின் சில செயற்பாடுகள் கிறிஸ்தவ ஒன்றிப்பை முன்னெடுக்கத்தடையாக இருக்கின்றன.

*9. கிறிஸ்தவ ஒன்றிப்பில் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

நமது தலத்திரு அவையில், கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சி 2ஆம் வத்திக்கான் சங்கம் காட்டிய திறந்த மனத்தோடும், சகோதர உணர்வோடும், சாத்தியமான முறைகளில் மேற்கொள்ளப்படவேண்டும். ஒற்றுமையின் ஊற்றாகிய வேதாகமத்தின் உணர்விலும், அறிவிலும் திருமழுக்கின் வழியாகப் பிறந்த ஒற்றுமை இணைப்பிலும் நாம் வளரவேண்டும். கிறிஸ்தவ சபைகளின் பொதுச் சொத்தான வேதாகமம் திருமுழுக்கு, சீடத்துவம், சகோதரத்துவம் போன்றவைகளின் அடிப்படையிலிலே உலகிற்கு சேவை செய்ய முன்வர வேண்டும்.

*10. பிற மத விசுவாசிகளுடனான உறவிலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

எம்மத்தியில் பிறமதத்தினரைப் பற்றிக் கடைப்பிடிக்கும், கண்ணோட்டமும், உறவுமுறைகளும், 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் கொள்கைகளின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்படவேண்டும். கிறிஸ்தவர் கிறிஸ்தவமல்லாத மறைகளைப் பின்பற்றுபவர்களோடு முன்மாதிரியுடனும், அன்புடனும் உயிரூட்டமுள்ள உரையாடல் நிகழ்த்தவேண்டும். அவர்களிடத்தில் காணப்படுகின்ற அருள்நெறி அறநெறி சார்ந்த நலன்களையும், சமூகப் பண்பாட்டு மதிப்பீட்டு நலன்களையும் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும். (கி. ம. தி. உ. எண் 2).

*11.பிறமறைகளின் மட்டில் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

தெளிவான கிறிஸ்தவ மறை அறிவும், பரந்த இறையுணர்வும் இல்லாமையினாலும், மற்றைய மறைகளைப் பற்றிய தவறான கணிப்பு இன்னமும், நமது மத்தியில் நிலைத்திருப்பதாலும், நாம் தாய்த்திரு அவை ஊக்குவிக்கும் உரையாடலிலும் உறவு வளர்த்தலிலும் ஈடுபடத் தயங்குகின்றோம். பிற மத உறவுகளை வளர்ப்பது நமது விசுவாசத்திற்கும் கிறிஸ்தவ வாழ்விற்கும் முரணானது என்ற தவறான கருத்து நம்மில் ஊன்றியிருக்கின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

*12.பண்பாட்டுடனான உறவிலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

"பண்பாடு" என்பது ஓர் இனத்தின் தனித்துவமான சொத்து. மனித வாழ்வுக்கு மறைகள் மட்டுமல்ல, மக்களின் பண்பாடும் உந்து சக்தி அளிக்கிறது. பண்பாட்டுடனும் நற்செய்தி உரையாட வேண்டும். பண்பாடு இல்லாமல் ஒரு மனிதனோ, ஓர் இனமோ தனித்துவமாக வாழமுடியாது. நற்செய்தி ஒவ்வொரு பண்பாட்டுடனும் உரையாடி அவைகட்கு மீட்பின் விழுமியங்களை அளிக்கவேண்டும். பண்பாட்டின் வழியாக அவ்வினத்தின் ஆன்மாவைத் தொடவேண்டுமென்றும் 2ஆம் வத்திக்கான் சங்கம் கூறியுள்ளது. (தி. எண் 17இ 53-60; ம. அ. பஇ எண் 22)

*13.சமூகத்துடனான உறவிலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

கிறிஸ்தவ வாழ்வு, தனிமையிலோ குழுமமாகவோ ஆலயத்தினுள் அல்லது தலத்திரு அவை எல்லைக்குள் மட்டும் வாழப்படுவதல்ல. மாறாக, நாம் வாழும் சமூகத்தின் அனைத்து மட்டத்திலும வாழப்படவேண்டும். "கிறிஸ்துவில் புதுப்பிக்கப்படுவதற்காகவும், இறைவனின் குடும்பமாக உருமாற்றப்படுவதற்காகவும் அழைக்கப்பெற்றுள்ள மனித

*சமுதாயத்தில் திரு அவை புளிக்காரம்போல் உள்ளது. ஏன் ஒருவிதத்தில் அம்மனித சமுதாயத்தின் ஆன்மாவாகவே திரு அவை அமைந்துள்ளது. தன் தனித்தனி உறுப்பினர்கள் வழியாகவும், தன் முழுச் சமுகத்தின் வழியாகவும் மனித குலத்தையும் அதன் வரலாற்றையும் இன்னும் அதிக மனிதத்தன்மை வாய்ந்ததாக ஆக்குவதற்குத் தன்னால் பெருமளவில் உதவமுடியுமென திரு அவை நம்புகிறது" (இ. உ. தி. எண் 40). எனவே நமது தலத்திரு அவையும் தமிழ்ச் சமூகத்தின் மெய்மைகளை இனங்கண்டு அவைகளை நற்செய்தி மயமாக்க அயராது உழைக்கவேண்டும்.*

*14.பொருளாதாரத்துடனான உறவிலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

*பொருளாதார நிலைமையும் செயற்பாடும் நமது மக்களின் வாழ்வை ஆழமாகப் பாதித்து வருகின்றது. மனித மாண்பிற்கும் நீதிக்கும் எதிரான முறைகள் அதிகரிப்பதால், நமது தலத்திரு அவை விழிப்பாயிருந்து செயற்படவேண்டும். "பொருளாதாரச் செயற்பாடு மனிதர்களின் ஒன்றித்த உழைப்பாலேயே பெரும்பாலும் உருவாவதால், அதை எந்த ஓர் உழைப்பாளிக்கும் கேடு விளைவிக்கும் வகையில் அமைப்பதும் செயற்படுத்துவதும் நீதிக்கு ஒவ்வாதது, மனிதத்தன்மையற்றது" (இ. உ. தி. எண் 67). திரு அவையின் போதனை இவ்வாறு இருந்தும், நமது தலத்திரு அவை இந்த அறைகூவலுக்குப் போதியளவு இன்னும் செவிமடுக்கவில்லை.*

*15.அரசியலுடனான உறவிலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

*வாழ்வோடிணைந்த அனைத்திலும் திரு அவை அக்கறையுடன் ஈடுபாடு கொண்டிருக்கவேண்டும் அதிலும், இன்று மனித வாழ்வைப் பெரிதும் நிர்ணயிக்கும் அரசியலில் திரு அவை தனக்குரிய முறையில் ஈடுபடவேண்டும். "நாட்டு அரசியல் சமூகத்தில், தங்களுக்கு இருக்கும் தனிப்பட்ட அழைத்தலைக் கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் உணர்திருக்கவேண்டும். அவர்கள் பொறுப்புணர்வைத் தங்களிடத்தில் வளர்த்துக்கொண்டு, பொதுநலனுக்குத் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் எடுத்துக்காட்டாக விளங்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். (இ. உ. தி. எண் 75). கிறிஸ்தவ விழுமியங்களை அரசியலில் புகுத்தக்கூடிய பொதுநிலை விசுவாசிகள் அப்பணிக்கு ஊக்குவிக்கப்படவேண்டும். அநீதிக்கெதிரானதும் நீதிக்கான திரு அவையின் எமது குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும்.*

*16. சமூகத் தொடர்புக்கருவிகளுடனான உறவிலும், பணியிலும் மற்றும் கல்விப்பணியில் பொதுநிலையினரின் பங்களிப்பு:*

*“திருஅவை நற்செய்தி அறிவிப்பது இன்றியமையாதது என்ற உணர்வினால் உந்தப்படுகின்றது. ஆகவே சமூகத் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தி, மீட்புச் செய்தியை அறிவிப்பதும், அக்கருவிகளைச் சரியாகப் பயன்படுத்தும் முறை பற்றிப் படிப்பிப்பதும் தன் கடமை எனக்கருதுகின்றது” (ச. தொ. க. எண் 3). ஆகவே, கிறிஸ்தவ விழுமியங்களைச் சகல மக்களும் அறிந்துகொள்ளும் வகையில், சமூகத் தொடர்புக்கருவிகளை மிகப் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, அவைக்காற்றுக்கலைகள் மற்றும் இணைய வழியூடான நிகழ்ச்சிகள் மூலம் கிறிஸ்தவ விழுமியங்களைச் சகல மக்களும் அறிந்துகொள்ளும் வகையில், மிகப் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும்.*

**முடிவுரை**

*திரு அவையின் வாழ்விலும் போதனைகளிலும் பிரச்சினைகள் ஏற்படும்போது திரு அவைத் தலைவர்களை ஒன்றுகூட்டி, விவாதித்து முடிவு எடுக்கச் செய்ய, திருத்தந்தை கூட்டுவதே பொதுச்சங்கம் என அழைக்கப்பட்டது. திரு அவை வரலாற்றில் இதுவரை 21 பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன. இரண்டாவது முறையாக வத்திக்கான் நகரில் கூட்டப்பட்ட இப் பொதுச்சங்கமே “2வது வத்திக்கான் சங்கம்” என அழைக்கப்படுகிறது. 1962 முதல் 1965 வரை 4 அமர்வுகளாக நடைபெற்ற இப் பொதுச்சங்கத்தில் உலகெங்குமிருந்து 2900க்கு மேற்பட்ட ஆயர்கள் பங்கேற்றனர். இப் பொதுச்சங்கம் திரு அவை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. பொதுநிலையினரைப் பொறுத்தமட்டில் ஒரு பொற்காலத்தை உருவாக்கித் தந்தது. திரு அவைக்குப் புத்துணர்ச்சி வழங்கி புதியதொரு சிந்தனையை அளித்து ஆழமான பொருள் நிறைந்த விதத்தில் அது இவ்வுலகில் பணியாற்றிட வழிவகுத்தது. சங்கத்தின் இறுதியில் 16 ஏடுகள் வெளியிடப்பட்டன. அனைத்து ஏடுகளிலும் பொதுநிலையினரைப் பற்றிய புதிய சிந்தனை பிரதிபலித்தாலும், புதிய பொதுநிலையினர் இறையியலை 1.திரு அவை , 2.பொது நிலையினரின் திருத்தூதுப் பணி, 3. இன்றைய உலகில் திரு அவை என்று மூன்று ஏடுகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.*

*இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளுக்கேற்ப இக்காலத்தின் தேவைகளுக்கேற்ப திரு அவையின் புதிய சட்டத்தொகுப்பு வெளியிடப்பட்டு 1983 ஆம் ஆண்டு முதல் அமுல்ப்*

படுத்தப்பட்டு வருகின்றது. இச் சட்டத்தொகுப்பு 4 முக்கிய கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. 1.இறை மக்களே திரு அவை 2. பணிபுரியவே ஆட்சி அதிகாரம் 3. திரு அவை ஓர் உறவுச்சமூகம் 4. திரு அவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிமைகள், கடமைகளோடு அனைத்துப் பணிகளிலும் அனைவரும் பங்கேற்பு. இவ்வாறாக சங்க ஏடுகள் மற்றும் திரு அவைச் சட்டத்தின் அடிப்படையில் பொது நிலையினர் இயல்பு, தன்மை, உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

## உசாத்துணைகள்


அமலச் சந்திரன், ஆ. (2009) *திரு அவையிலும் சமுதாயத்திலும் பொதுநிலையினர் தலைமைப்பணி,* திருச்சிராப்பள்ளி: தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு.

அல்போன்சு, தே., புஸ்பராஜன், அ. மற்றும் தேவராஜ், எஸ். (2002), *புதுயுகத்தில் பொதுநிலையினர்.* திருச்சி: தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு.

யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு. (1986), *ஆயத்தச் சிற்றேடு: இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் முடிவுற்று இருபது ஆண்டுகளின் பின்னர் திரு அவையிலும், உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும் மறைப்பணியும்: பொதுநிலையினரினதும் குடும்பத்தினதும்,* யாழ்ப்பாணம்: யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு வெளியீடுகள்.

யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு. (1987), *ஆயத்தச் சிற்றேடு: ஆயர்கள் மன்றம், இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிவுற்று இருபது ஆண்டுகளின் பின்னர் திரு அவையிலும், உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும், மறைப்பணியும்,* யாழ்ப்பாணம்: யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு வெளியீடுகள்.

ஆயர்கள் மன்றம். (1981) *இரண்டாம் வத்திக்கான் சங்கம்: திரு அவை பற்றிய மறைக் கொள்கைத்திரட்டு.* திருச்சிராப்பள்ளி: புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி.

யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு. (1987) *இரண்டாம் வத்திக்கான் சங்கம்: பொதுநிலையினரின் மறைப்பணி பற்றிய தீர்மானத் தொகுப்பு- பொதுநிலையினரதும், குடும்பத்தினதும்.* யாழ்ப்பாணம்: யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு வெளியீடு.

இருதயராஜ். லு. (2007) 'பங்கேற்பின் பல்வேறு பரிணாமங்கள்', *தோழன்,* 48(3), பக் - 08.

அம்புறோஸ், இ. (2007) 'பொதுநிலையினரின் அழைப்பும், மாண்பும், பணியும்', *தோழன்,* 48(2), பக் - 19.

இம்மானுவேல், எஸ். ஜே. (1981) *பொதுநிலையினரின் முதிர்ச்சி,* யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்,

சூசை மாணிக்கம், செ. (2007) *பொதுநிலையினரே இது உங்கள் நேரம்,* திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம்.

சூசை மாணிக்கம், செ. (2007) 'பொதுநிலையினர் சொல் விளக்கம்', *தோழன்,* 48(3), பக் - 15.

ஞானப்பிரகாசம், த. (2007) 'பொதுநிலையினரின் மாண்பு', *தோழன்,* 48(2), பக் - 05.

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு, (1986), *திரு அவைச் சட்டத்தில் பொதுநிலையினரின் பொறுப்புகளும், உரிமைகளும்.* யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு வெளியீடு – 02, யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்.

தேவராஜ். எஸ். (2006) *மாற்றம் தேடும் திரு அவை எதிர் கொள்ளும் சவால்களும், எதிர்நோக்கும் செயல்பாடுகளும்,* திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம்.

பவுல் லியோன் இ. வ., எரோணிமுசு, கு., மற்றும் அந்துவான், லூ. (1967) 'இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்', *தேடல்*, 07(2), பக் - 03.

மரியதாசன், வ. (1968) *பொதுநிலையினரின் பொற்காலம்*. திருச்சிராப்பள்ளி: புனித வளனார் தொழிற்பேட்டை பயிற்சி அச்சகம்.